**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# What is wrong with the Church?
# Acts 20:7-12

**Acts 20:7-12**, ***வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான். 8. அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது. 9. அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம்பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான். 10. உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக்கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். 11. பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டுப் புசித்து, விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து, பின்பு புறப்பட்டான். 12. அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள்.***

லூாக்கா சபையின் வரலாற்றை தான் எழுதிய அப்போஸ்தலா் புத்தகத்தில் விவரித்திருக்கிறாா்.

அப்போஸ்தலா் 2ஆம் அதிகாரத்தில் சபை எப்படி உருவானது என்றும். பின்பு சபை பல பாடுகளுக்குள்ளாக கடந்த சென்றதையும் எழுதியுள்ளாா். யூதேயா, சமாரியா நாடுகளுக்குள் சபை வளா்ந்தது.

அப்போஸ்தலா் 9ஆம் அதிகாரத்தில் தமஸ்குவிலே ஆண்டவா் சவுலை சந்தித்ததும், பின்பு பவுலாக மாறியதையும் எழுதியுள்ளாா்.

அப்போஸ்தலா் 10ஆம் அதிகாரத்தில் பேதுருவை தேவன் புறஜாதிகளிடத்திற்கு சுவிஷேத்ததை பகிரவும், அவா்கள் ஏற்று கொண்ட காாியங்களையும் குறித்து எழுதியுள்ளாா்.

அப்போஸ்தலா் 15ஆம் அதிகாரம் தொடங்கி அப்போஸ்தலனாகிய புவுலுடைய பிரயாணங்களில் லூாக்காவையும் இணைத்து கொள்வதையும் காண்கிறோம். பவுல் அறிவித்த சுவிஷேத்தினால் ஆசியாவிலே பெரிய மாற்றம் உண்டானது.

அப்போஸ்தலா் 16ஆம் அதிகாரம் தொடங்கி பிலிப்பியா, தெசலோனிக்கா, பெரேயா, அத்தேனா, கொரிந்து மற்றும் பல இடங்களில் சபை தோன்றியதை பாா்க்கிறோம்.

அத்தேனா பட்டணத்தில் பவுல் செய்த பிரபலமான பிரசங்கத்தை அறிவோம். அவா் பிரயாணங்கள் தோறும் கா்த்தருக்காக அடிக்கப்பட்டு, வேதனைப்பட்டு, சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டாா். கா்த்தருக்காக பவுல் தன்னையே அற்பணித்து இருந்தாா்.

நாம் பாா்க்கப் போகிற சம்பவம் பவுலுடைய 3ஆம் மிஷனெரி பிரயாணத்தின் போது நடந்தது. பவுல் எருசேலுமுக்கு பிரயாணம் போகிற வழியில் துரோவா பட்டணத்தில் தங்கி பிரசிங்கித்த போது ஒரு வாலிபன் தூங்கி தவறி விழுந்து மாித்து விடுகிறான். இந்த சம்பவத்தை பவுல் அப்போஸ்தலா் 20 ஆம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறாா.

**நீங்கள் சிந்தித்து இருக்கிறீா்களா?** ஏன் இது நடந்தது என்று.

**ஏன் ஆவியானவர் இந்த சம்பவத்தை லூக்கா மூலமாக எழுதியிருக்கிறார்?** ஏனென்றால் இதன் மூலமாக சபை ஒரு பாடத்தை கற்று கொள்ள வேண்டுமென்று.

துரோவா:




பவுல் எருசலேமில் தேவையில் உள்ள சகோதரருக்காக பணத்தை சேகரித்து கொண்டிருக்கிறார். அதன் ஒரு பங்காக துரோவா பட்டணத்தில் பிரயாணப்பட்டு தங்குகிறார்.

**Acts 20:6, *புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களுக்குப்பின்பு நாங்கள் கப்பல் ஏறிப் பிலிப்பி பட்டணத்தை விட்டு ஐந்து நாளைக்குள்ளே துரோவாபட்டணத்துக்கு அவர்களிடத்தில் வந்து, அங்கே ஏழுநாள் தங்கியிருந்தோம்.***

துரோவா பட்டணத்தில் உள்ளவர்கள் பவுலை அறிந்திருந்தபடியால், அவர் எருசலேமிற்கு விரைவில் சென்றுவிடுவார் என்று தெரிந்து அவர் பிரசங்கிக்க ஆயத்திப்படுத்தினார்கள்.

இது பவுல் துரோவா பட்டணத்தில் உள்ளவர்களுக்கு செய்த இறுதி பிரசங்கம்.

**V 7 *வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டு மென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்.***

கிறிஸ்தவர்களாக ஒன்று கூடி இருந்த ஒரு நிகழ்வு அது.

**அவர்கள் எப்பொழுது ஒன்று கூடியிருந்தார்கள்?**
வாரத்தின் முதலாம் நாளில், வழக்கமாக அந்நாளில் சபை கூடி வந்தார்கள்.

**அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒன்று சேரவில்லையா?**
சேர்ந்தார்கள் இதை நாம் அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.

கிறிஸ்தவம் என்பது வாரத்திற்க்கு ஒரு முறை கூடுவது மட்டுமல்ல! அது அனுதினமும் கடைபிடிக்க வேண்டிய ஒன்று.
துரோவா சபை வாரத்திற்க்கு ஒரு முறை கூடியது. வீடுகளில் வேதபடிப்பு இருந்தது. அவர்கள் வீடுகள் தோறும் அப்பம் பிட்டு ஒன்றாய் இருந்தனர். ஆகையால் தொடக்கத்தில் அவர்கள் வீடுகளில் கூடுவது வழக்கம்.

**John 20:19**, ***வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.***

வாரத்தின் முதலாம் நாள் கூடிவந்தார்கள், ஏன் முதலாம் நாள்?

இயேசு உயிர்தெழுந்தது முதலாம் நாளில், பின்பு சிஷர்களுக்கு தரிசனமானதும் அது வாரத்தின் முதலாம் நாள். ஆகவே சபை முதலாம் நாளில் சபை கூடி உயிர்த்தெழுந்த தேவனை ஆராதிப்பது வழக்கம். அது ஒய்வு நாள் அல்ல.

**Colossians 2:16-17**, ***ஆகையால், போஜனத்தையும் பானத்தையும்குறித்தாவது, பண்டிகைநாளையும் மாதப்பிறப் பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. 17. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது.***

துரோவா பட்டணத்தில் சிலா் அடிமைகளாக இருந்ததினால், பகல் முழுவதும் வேலை செய்து விட்டு பின்பு அவா்கள் மாலையில் கூடி வந்திருக்கலாம்.

சிலா் ஞாயிறு ஆராதனையில் மாத்திரம் ஆண்டவா் தம்முடைய கிரியைகளை செய்கிறாா் என்று எண்ணுகிறாா்கள். அவா் ஒரு நாளுக்கு மட்டும் தேவன் அல்ல. அந்த ஒரு நாள் மட்டும் பரிசுத்தமான நாள் அல்ல. எல்லா நாளிலும், வாரம் முழுவதும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். தேவனோடு அனுதினமும் நாம் அவரோடு உறவாட விருப்பமாயிருக்கிறாா்.

பவுல் வரும்பொழுது அவா்கள் ஆயத்தமாக பணத்தை சேகரித்து கொண்டுவர அறிவுறுத்தியிருந்தாா்.

**1 Corinthians 16:2**, ***நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.***

துரோவா பட்டணத்தில் அவா்கள் கூடிவந்திருந்த போது அப்பம் பிட்டாா்கள். அது ஒரு அன்பின் விருந்து. ஒவ்வொருவரும் தங்களிடத்தில் உள்ளதை பகிா்ந்து மற்ற விசுவாசிகளுடைய தேவையையும் சந்தித்தனா். அவா்கள் கூடி உண்பது தவறு அல்ல, இந்த கூடுகை உணவிற்காக மாத்திரம் உண்டாயிருந்தால் அது சரியான நோக்கமல்ல.

அந்நாட்களில் ஒவ்வொரு பட்டணங்களிலும் விசுவாசிகள் கூடி ஜெபித்து, வேதத்தை தியானித்ததின் மூலம் தேவ வசனம் வளா்ந்து பெருகிற்று.

**Acts 6:4**, ***நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.***
**Acts 6:7**, ***தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.***

**Acts 12:24,** ***தேவவசனம் வளர்ந்து பெருகிற்று.***

**Acts 19:20,** ***இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.***

பவுல் அடுத்த நாள் பிரயாணப்பட்டு எருசலேமிற்கு செல்ல வேண்டும், அதற்கு முன்பாக அவர் பிரசங்கம் செய்கிறார்.

**V 8-9, *அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது. 9. அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம்பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.***

அந்த வீட்டு எஜமான் ஒரு பணக்காரனாக இருந்து இருக்க வேண்டும். 3 மாடி வீடு, அதில் நிறைய விளக்குகள் இருந்திருக்கிறது.
அந்த வாலிபன் அப்பம் பிட்குதல் (விருந்தை) அதாவது உணவை நன்றாக சாப்பிட்டு இருக்க வேண்டும். அதினிமித்தம் ஜன்னல் அருகே காற்று வாங்கி கொண்டே அப்படியே தூங்கியிருக்கலாம். அவன் தூங்கி மூன்றாம் மெத்தையிலிருந்து கிழே விழுந்து விட்டான்.

இன்றைய நாட்களில் சபைகளின் ஆராதனை பலரை தூங்க வைக்கின்றது. போதகர்கள் தாங்கள் பிரசங்கம் செய்ய போகின்ற காரியத்தை சரியாக ஆயத்தம் இல்லாமல் செய்கிறார்கள். சில போதகர்கள் எப்படி சபை விசுவாசிகளை சந்தோஷமாக வைத்து கொள்வது என்று மட்டும் சிந்திக்கிறார்கள்.

சபைகளில் தூங்குவதற்கு காரணம் வார்த்தையை சரியாக பகிராததினால், சடங்காச்சாரமாக செய்வதால், கடமைக்கென்று செய்வதால். இப்படி பல காரணங்கள் உண்டு.

கர்த்தருடைய வார்த்தையை கேட்கிற நீங்கள் தூங்க கூடாது. சபை ஆராதனை உற்சாகமாக எப்படி நடத்துவது? எப்படி பங்கு கொள்வது?

1. **ஆயத்தப்படு**

நீங்கள் உலகபிரகாரமாக ஒரு காரியம் செய்யும் பொழுது சரியாக ஆயத்தப்படுகிறீர்கள். அதே போல போதகரும் அவருடைய ஊழியத்திற்கு உண்மையாக, விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏதுவாக ஆயத்தப்பட வேண்டும். சபை விசுவாசிகளும் தேவனிடத்தில் இருந்து வார்த்தையை பெற ஆயத்தப்பட வேண்டும்.

ஞாயிறு ஆராதனைக்கு அன்றைய தினம் காரியங்களை ஆயத்தபடுத்தாமல் குறைந்தது ஒரு நாளைக்கு முன்பாக முடிந்த வரை ஆயத்தப்படுத்த வேண்டும்.

**நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?**
வீட்டிற்கு யாராவது வருகிறார்கள் என்றால் போதுமான அளவு உணவு தயார்படுத்துவீகள் அல்லவா?

நீங்கள் யாரையாவது ஆலயத்திற்கு கொண்டுவருவதற்கு ஏதுவாக நேரமாக எழுந்து ஆயத்தப்படுகிறீர்களா?
நீங்கள் யாரையாவது ஆலயத்திற்கு பிறகு கொண்டுசொல்வதற்கு தயராக இருக்கிறீர்களா?

வெளிப்புறத்தை மாத்திரம் அல்ல உங்கள் இருதயங்களையும் ஆயத்தபடுத்துங்கள்.

ஆண்டவர் உங்களோடு இடைபட வேண்டும் என்று எண்ணி ஆலய ஆராதனைக்கு வருகிறீர்களா?
நீங்கள் அந்த வாரம் முழுவதுமாக ஆராதனைக்காக உங்களை தயார்படுத்தி கொண்டிருந்தீர்களானால், நீங்கள் ஆராதனையில் ஆண்டவரை சந்திக்க தயராக இருப்பீர்கள்.

**Amos 4:12, *ஆகையால் இஸ்ரவேலே, இந்தப்பிரகாரமாக உனக்குச் செய்வேன்; இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிறபடியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.***

ஆலயத்திற்கு வந்தால் நமக்கு என்ன கிடைக்கும் என்று மட்டும் எண்ணாமல், நான் மற்றவர்களுக்கு எந்த விதத்தில் ஆசிர்வாதமாக இருக்க போகிறேன் என்று சிந்திக்க வேண்டும்.

**அ) ஆண்டவரை பற்றிய சத்தியம் திட்டமாக, அந்த சத்தியத்தை கனப்படுத்திகிற சபைக்கு செல்ல வேண்டும்.**

நாம் ஆராதனைக்கு செல்லும் முன் அந்த சபை சத்தியத்தை சத்தியத்தை சத்தியமாக போதிக்ககின்ற சபை என்று அறிந்து ஆயத்தமாக செல்ல வேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆண்டவரை அறிந்து பின் பற்றிய ஜனங்கள. மிகவும் சந்தோஷமாக பெத்தேலுக்கு வந்தனர். ஆனால் அதன் பின்பு ஆண்டவரை மறந்து உண்மையற்ற அந்நிய தெய்வங்களை வணங்கினர்.

அவர்கள் சடங்காச்சாரமாக காணிக்கைகளையும், பலிகளையும் செலுத்தினார். ஆனால் உண்மை தெய்வத்தை ஆராதிக்கவில்லை.

நான் ஒரு இடத்திற்கு பிரயாணமாக செல்லும் போது பிரதானமாக சத்தியத்தை சத்தியமாக போதிக்கின்ற ஆலயத்தை தேடி செல்வேன். எந்த ஆலயத்தில் சரியாக, தெளிவாக வேதாகமம் சார்ந்த சத்தியங்கள் போதிக்கபடுகின்றதோ, நான் அங்கே செல்ல நாடுவேன்.

ஆண்டவரை பற்றிய சரியான போதனையை கொடுக்கிற ஆலயத்தை கண்டுபிடிப்பதே முதல் ஆயத்தம்.

**ஆ) உங்கள் வாழ்கையில் அனைத்து பாவங்களையும் விட்டுவிட வேண்டும்.**

நாம் நம்முடைய சகல பாவங்களையும் விட்டுவிட, மன்னிக்கப்பட தயராக ஆராதனையில் பங்கு கொள்ள வேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய பாவங்களை மறைத்து கொண்டு கர்த்தரை ஆராதிக்க முயன்றனர். அவர்கள் தரித்திரர்களை நொறுக்கி, எளியவர்களை ஒடுக்கினார்கள்.

நாம் அந்நிய தெய்வங்களை மனதில் வைத்து கொண்டு தேவனுக்கு ஆராதனை செய்வது விருதா.

ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்ளுகிற நான் பாவி, நான் உடைந்த உள்ளத்தோடு பாவங்களை அறிக்கையிட்டு தேவனால் சுத்திகரிக்கப்படுவேன் என்ற நிச்சயத்தில் பங்கு பெறுகிறவனிடத்தில் ஆண்டவர் பிரியப்படுகிறார்.

ஆனால் வாரம் ஒரு முறை ஆண்டவரோடு இருப்பது போல காண்பித்து மற்ற நாட்களில் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களை தேவன் மன்னிப்பதில்லை.

பாவங்களை அறிக்கையிட, அதிலிருந்து விடுபட, ஆண்டவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டு, அவருடைய பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற நாடுவதே சிறந்த ஆயத்தம்.

இ) தேவன் நம்முடைய வாழ்வில் செய்ய நினைப்பது என்ன?

நாம் கர்த்தரை நோக்கி பார்க்க தேவன் பிரயாசப்படுகிறார்.
இஸ்ரவேல் ஜனங்கள் தேவனிடத்திற்கு திரும்புவதற்காக ஐந்து முறை அவர்களுடைய வாழ்வில் தேவன் சில காரியங்கள் மூலம் உணர்த்தியிருக்கிறார்.

“ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள்'' என்று ஐந்து முறை கூறப்பட்டுள்ளது.

ஆண்டவர் ஒவ்வொரு இயற்கை நிகழ்வுகளிலும் இஸ்ரவேல் ஜனங்கள் தன்னிடம் திரும்ப வேண்டும் என்று செய்கிறார்.
Each of these things God had done to get their attention could be explained as natural events with no divine cause.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆண்டவருடைய சத்தை கேட்டு அவரிடம் திரும்ப வேண்டும் என்கிற பொறுப்பை அவர்களிடம் கொடுத்திருக்கிறார். அவர்கள் தேவனுடைய வார்த்தையை கேட்கவில்லை, அவருடைய கரத்தையும் காணவில்லை. இதினால் ஆண்டவர் சமூகத்திற்கு திரும்பாமல் அவர்கள் தோற்றுவிட்டனர். இப்படிபட்ட காரியத்தை நாம் ஒருபோதும் செய்யக்கூடாது.

நாம் நம்முடைய வாழ்கையை சாதாரண கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது. நாம் கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்கவும், அவரிடத்திற்கு திரும்பவும், நம்முடைய வாழ்கையை தேவன் கிருபையாய் நடத்துகிறார். அவருடன் நாம் இணைந்து வாழ்வதற்காக அவர் செய்யும் காரியங்களை நாம் உற்று நோக்க வேண்டும்.

ஈ) உங்கள் இதயத்தினால் கர்த்தரிடத்தில் திரும்புங்கள்.

“ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள்'' என்று ஐந்து முறை கூறப்படுவதின் மூலம் தேவன் ஜனங்கள் ஒவ்வொரு முறையும் ஆராதிக்க வந்தார்கள் என்ற பொருள் இல்லை.

நாம் நம்முடைய சரீரத்தில் எல்லா ஞாயிற்றுக் கிழமையும் ஆலயம் செல்லலாம், ஆனால் நம்முடைய இருதயம் ஆலயத்தில் இல்லை என்றால் அது வீண்.

ஆண்டவரிடத்தில் திரும்புவது என்பது சரீரத்தில் அல்ல, அது நம்முடைய இருதயத்தில். நம்முடைய மனம் ஆண்டவரை சந்திக்க தயாராக வேண்டும்.

**Matthew 15:8**, ***இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.***

“ஆண்டவருடன் இருக்கும் தூரமான உறவிலிருந்து மாறி நாம் அவரிடத்தில் கிட்டி சேர வேண்டும்.

- நீங்கள் சனிக்கிழமை இரவு அல்லது ஞாயிறு காலையிலாவது ஆண்டவரை பற்றி நினைக்கவில்லை என்றால் நீங்கள் தூரம் போனவர்கள்.
- நீங்கள் ஆண்டவருக்கு சிறிதளவு முக்கியம் கொடுக்க நினைக்கலாம் ஆனால் அதுவும் மற்ற காரியங்களினால் தடைபடுகிறது.
- நீங்கள் ஆண்டவருடன் ஒரளவு உறவில் இருக்க நினைப்பீர்கள். ஆனால் சில உலக பிரகாரமான காரணங்களினால் முதன்மையான இடம் மாறுகிறது.

ஒவ்வொருவரும் எப்படி ஆண்டவருக்காக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அதிலிருந்து பல்வேறு காரணங்களினால் மாறுபடுகிறோம்.

**2.** பங்குபெறு

ஆலய ஆராதனைகளில் உற்சாகமாக நீங்கள் பங்கு பெற வேண்டும்.
ஆண்டவர் எனக்கு என்ன செய்வார் என்று பாராமல், நான் ஆண்டவரை எப்படி ஆராதிப்பேன் என்று நோக்க வேண்டும்.

ஆண்டவர் நீங்கள் ஆராதனையில் என்ன செய்கிறீர்கள் என்று பார்க்க வருகிறார்.

நீங்கள் பார்வையாளராக மட்டும் இருக்காதீர்கள்.
நீங்கள் ஆலயத்திற்கு வந்து ஆசிர்வாதமாய் இருப்பதே பிரதான நோக்கமாயிருக்க வேண்டும்.

ஆராதனை என்பது நம்மை பற்றியது அல்ல. அது தேவனுக்குரியது.

**Psalms 34:1-3,** ***கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். 2. கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள்.***
***3. என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.***

தாவீதை போல கர்த்தரை துதிப்பேன் என்று நீங்கள் தீர்மானிக்கலாம். நீங்கள் ஆராதிக்க தொடங்கும் போது எல்லா தேவையற்ற எண்ணங்களும் மாற தொடங்கும்.

நாசியில் சுவாசமுள்ள யாவும் துதிப்பதாக.

**Psalms 150:6,** ***சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. (அல்லேலூயா.)***

உங்களை தவிர வேறே ஒருவரும் உங்களுக்காக துதி ஆராதனை செய்ய முடியாது.

ஆராதனைக்கு வரும் பலர் எதிலும் பங்கு பெறுவதில்லை, அவர்கள் எப்படி ஆராதனைக்கு வந்தார்களோ அப்படியே திருமப்பி செல்கின்றனர்.

நீங்கள் ஒரு உணவகத்திற்கு பசியோடு சென்று, அங்கே எல்லாவற்றையும் சுற்றி பார்த்து விட்டு வந்தால் உங்கள் பசி ஆறாது. அதே போல் ஆராதனையில் முழு ஈடுபாடோடு பங்கு பெறாவிட்டால் உங்கள் ஆத்தும தாகம் தீராது.

ஒரு செல்ல பிராணி நாய்க்கு பசி வந்தால் தன் எஜமானிடம் அருகில் நின்று வாயை திறந்து நிற்கும். அதே போல் நீங்களும் உங்கள் ஆவிக்குரிய பசியை தீர்க்க ஆண்டவரை துதித்து ஆராதித்து பசியை ஆற்ற வேண்டும்.

**Psalms 22:3**, ***இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.***

நீங்கள் உறங்கும் போது உங்களை சுற்றி நடப்பது உங்களுக்கு தெரியாது. அதே போல் சிலர் ஆலயத்தில் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாமல் உறங்குகிறார்கள். நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கலாம் ஆனால் இன்னும் உறங்கி கொண்டு தான் இருக்கிறீர்கள்.

**Why no one warned the young man Eutychus?**
**Why no one cared for Eutychus?**

ஏன் ஒருவரும் துரோவாவில் ஐத்தீகுவை எச்சரிக்கவில்லை?
ஏன் ஒருவரும் ஐத்தீகுவிற்காக கரிசனை கொள்ளவில்லை?

இன்றைய காலத்தில் பல வாலிபர்கள் தெருக்களில் மரித்து போகிறார்கள். சபை பாரம்பரியங்களை கற்று கொடுப்பதிலும், ஆடலிலும், பாடலிலும் நேரங்களை செலவழிக்கின்றன.

பலர் சபை சுழலை குறைகூறுகிறார்கள் ஆனால் சுழ்நிலையை மாற்ற அவர்கள் தயாராக இல்லை.

துரோவாவில் ஐத்தீகு ஜன்னலிருந்து கிழே விழுந்த போது சிலர் வேடிக்கை பார்த்த கொண்டிருந்தனர், பவுலும் மற்றும் கூட இருந்தவர்களும் வெளியே வாசலில் வந்து பார்த்தனர்.
மக்கள் சிலர் அவன் மரித்து விட்டான் என்று கூறனிர்கள். நம்பிக்கையற்று இருந்தார்கள். பவுல் அவர்கள் சொல்வதொன்றையும் கேட்கவில்லை.

**V 10-11*, உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக்கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். 11. பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டுப் புசித்து, விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து, பின்பு புறப்பட்டான்.***

பவுல் அவனுக்கு பரிசுத்த ஆவியினால் ஜீவன் கொடுத்தான்.

உங்களிடத்திலும் பரிசுத்த ஆவி உள்ளது. அதன் துணையுடன் நீங்களும் தேவனுடைய வார்த்தையை கூறி பாவத்திற்கு மரித்தவர்களை தேவனிடத்திற்கு திருப்பி உயிர்பிக்க முடியும்.

நீங்கள் என்ன செய்ய போகிறீகள்? பவுல் அவனுக்கு தேவனால் ஜீவன் தந்தார்.

# Conclusion:

முடிவுரை

- ஐத்தீகு மீட்கப்பட்ட கதை.
- நாமும் பாவத்திற்கு மரித்திருந்தோம்.
- தேவன் நமக்காக சிலுவையில் மரித்தார்.
- கல்லறையிலிருந்து உயிர்தெழுந்தார்.
- நம்மை மீட்டுக்கொண்டார், நாம் விடுதலை பெற்றோம்.